* 54. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 25 of 1981), as passed by the Assembly.

* 55. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 26 of 1981), as passed by the Assembly.

* 56. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 (L.A. Bill No. 27 of 1981), as passed by the Assembly.

* 57. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 28 of 1981), as passed by the Assembly.

இணைப்பு 1.

[320 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திரு. பி. டி. அரசு என்ற பி.டி. ஆசிரியர் 20—6—1968 முதல் தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அவரைப் பள்ளிச் செயலாளர் 10—1—1981-ல் பள்ளிக் குழுவின் தீர்மானத்தின்படி. 'மொத்தத் தீய நடத்தைக்காக' Gross misconduct 11—1—1981 முற்பகல் முதல் தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளார்.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973, விதி 22 ன் கீழ் விசாரணையின் நிமித்தம், ஆசிரியர் அல்லது ஆசிரியரல்லாத தனியார் பள்ளி பணியாளர் ஒருவரை இரண்டு மாத காலத்திற்' மிகாமல் தற்காலிக பணிநீக்கம் செய்யும் அதிகாரம் பள்ளிக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை குறித்த காலத்தில் முடியவில்லை என்றால் உரிய அதிகாரியிடம் மேலும் இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு பெறலாம். அந்த ஆசிரியர்க்கு உரிய பணிக்கால ஊதியம் மற்றும் பிழைப்பு ஊதியத்தையும் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி நிர்வாகம் தற்காலிக பணிநீக்கம் செய்த செயலை எதிர்த்து 29—1—1981 பிற்பகல் 3 மணி அளவில் சென்னை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் தி. நகர் மேல்நிலைப் பள்ளி அருகில் கிளர்ச்சி செய்து ஊர்வலமும் நடத்தினர். அதில் வன்முறை சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. மற்றும் அந்த நிகழ்ச்சிகளில் பெற்றோர்களோ மாணவர்களோ ஈடுபடவோ அல்லது பாதிக்கப்படவோ இல்லை. பள்ளி உள்ள பிராந்தியத்தில் பதட்ட நிலை ஏதும் இல்லை.

* Circulated to all M.L.Cs. on 6th March 1981.